2020-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 12-ம் தேதி புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற நகரமன்ற சிறப்புக்கூட்ட நடவடிக்கைகளின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.த.சௌந்தரராஜன்.பி.ஏ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

ஆம்பூர் நகராட்சியானது தேர்வுநிலை நகராட்சியாகும், நகரம் 36 வார்டுகளை கொண்டது. இந்நகரின் பரப்பளவு 17.97 சதுர கிலோ மீட்டராகும். இந்நகரின் மக்கட் தொகை 114608 ஆகும். இந்நகரமானது 425 தெருக்களை கொண்டு, 26302க்கு மேற்பட்ட குடியிருப்புகளும், 2518 வர்த்தக நிறுவனங்களும் உள்ளன.தற்போதைய நிலவரப்படி 1,25,094 மக்கள் தொகை கொண்டுள்ளது.

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தோற்றுவிக்கப்பட்ட மொத்த தூய்மை பணியாளர் பணியிடங்கள் எண்ணிக்கை 133, தற்போது 64 நபர்கள் மட்டுமே பணிபுரிந்தும், 69 பணியிடங்கள் காலியாகவும் உள்ளது. இந்நகராட்சியில் மேற்படி பணியாளர்களை கொண்டு தினமும் திடக்கழிவு மேலாண்மை மற்றும் துப்புரவு பணிகள் மேற்கொள்வது மிகவும் சிரமமாக உள்ளது.

இந்நகரில் 110.30 கிலோமீட்டர் நீளத்தில் திறந்தவெளி மழைநீர் கால்வாய்களும், தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, தோல் தொழிற்சாலைகள் மற்றும் கிராமங்களிலிருந்து நகரத்திற்கு மக்கள் வந்து செல்கின்றனர், இவ்வாறான நிலையில் குப்பைகள் அதிகமாக சேருகிறது, குறைவான பணியாளர்களை கொண்டு பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்வது மிகவும் சிரமமாக உள்ளது, குறைந்த அளவு பணியாளர்களை கொண்டு இப்பணிகளை மேற்கொள்ள இயலாத காரணத்தினால் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் ஒப்புதல் கடிதம் ந.க.எண். 10623/P3/2017 நாள்.19.06.2017ன் படி 233 நபர்களுக்கு அனுமதிப்பெற்று படிப்படியாக 130, பின்னர் 180, தற்போது 2020 ஆகஸ்டு மாதத்தில் இருந்து கூடுதலாக 30 தூய்மைபணியாளர்களுடன் ஆக மொத்தம் 210 தூய்மைபணியாளர்களை கொண்டு 36 வார்டுகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப துப்புரவு பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்வது சிரமமாக உள்ளது. மேலும், நகராட்சிக்கு செந்தமான வாகனங்கள் 1,டம்பர்பிளேசர் 1,டிப்பர்லாரி LCV 10 எண்ணிக்கை J.C.P 2 எண்ணிக்கை ஆகியவற்றில் பணியாற்ற போதிய பணியாளர்கள் இல்லை.

திடக்கழிவு மேலாண்மை கையாளுதல் விதி 2000 மற்றும் அரசாணை நிலை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.இ.3) துறை நாள்.30.04.1997ன் படி இந்நகராட்சி பகுதியில் தற்போதைய நிலையில் உள்ள தூய்மைபணியாளர்கள் மற்றும் வாகனங்களை கொண்டு 100 சதவிகித பணிகள் செய்ய மிகவும் சிரமமாக உள்ளது.

மேற்காணும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள 395 பணியாளர்கள் தேவையான நிலையில் 64 நிரந்தர தூய்மை பணியாளர்களை கொண்டும், 210 தனியார் நிறுவன தூய்மைபணியாளர்களை கொண்டும், ஆக மொத்தம் 274 (64+210=274) தூய்மைபணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, தற்போதைய நிலையில் கூடுதலாக 121 தூய்மை பணியாளர்கள் தேவைபடுகின்றனர், ஆக மொத்தம் இந்நகராட்சிக்கு 395 தூய்மைபணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

அரசணையின்படி கீழ்க்கண்டவாறு துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகிறது.

| வரிசை எண் | விவரம் | தேவைப்படும் பணியாளர்கள் |
|---|---|---|
| 1 | 250 குடியிருப்புகளுக்கு 3பேர் கொண்ட குழு விதம்(26302/105x3=315) | 315 |
| 2 | டிப்பர் லாரி1 எண்ணிக்கை | 4 |
| 3 | பேருந்து நிலையம் | 10 |
| 4 | LCV 10 எண்ணிக்கை | 20 |
| 5 | டம்பர் பிளேசர் 1எண்ணிக்கை | 2 |
| 6 | பிரதான சாலைகளில் துப்புரவு பணி | 10 |
| 7 | மார்க்கெட் பகுதிகளில் துப்புரவு பணி | 4 |
| 8 | உரக்கிடங்கு MCC பகுதிகளில் துப்புரவு பணி | 20 |
| 9 | ஜே.சி.பி வாகனம் | 2 |
| 10 | Windrow Pad 2 No's | 8 |
| | மொத்தம் | 395 |

**துப்புரவு பணியாளர்கள் செலவினங்கள் விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 1) | மாவட்ட ஆட்சியர் திருப்பத்தூர் அவர்களின் தினிக்கூலி பட்டியல் படி துப்புரவுபணியாளர்களுக்கு 2020-2021-ம் ஆண்டுக்குறிய தினக்கூலி | : | ரு.352 |
| 2) | ஒரு துப்புரவு பணியாளருக்கு 1 ஆண்டுக்குரிய கூலி(352x365) | : | ரு.1,28,480/- |
| | EPF - 13% | | ரு.16702/- |
| | ESI - 4.75% | | ரு.6103/- |
| | சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்களுக்கு 1 ஆண்டுக்குறிய தொகை | : | ரு.1500/- |
| | ஒப்பந்ததாருக்குரிய நிர்வாக செலவு 5% | : | ரு.6424/- |
| | மொத்தம் | : | ரு.1,59,209/- |
| 3) | 331 துப்புரவு பணியாளர்களுக்கு 1 ஆண்டுக்குரிய செலவினம் (ரு.234276x331) | | 7,75,45,356/- |

**மேற்பார்வையாளர்களுக்குரிய செலவின விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 1) | மாவட்ட ஆட்சியர் திருப்பத்தூர் அவர்களின் தினக்கூலி பட்டியல் படி மேற்பார்வையாளருக்கு 2020-2021-ம் ஆண்டுக்குறிய தினக்கூலி | : | ரு.488/- |
| 2) | ஒரு மேற்பார்வையாளருக்கு 1 ஆண்டுக்குரிய கூலி | : | ரு.178120/- |
| | EPF - 13% | : | ரு.23156/- |
| | ESI - 4.75% | : | ரு.84601/- |
| | ஒப்பந்ததாருக்குரிய நிர்வாக செலவு 5% | : | ரு.8906/- |
| | மொத்தம் | : | 2,94,783/- |
| 3) | 3 மேற்பார்வையாளருக்கு 1 ஆண்டுக்குரிய செலவினம் (ரு.2,94,783 x 3) | : | ரு.8,84,349/- |

மேற்கண்ட விவரப்படி தேவைப்படும் 395 பணியிடங்களில், தற்போது 64 தூய்மைபணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர், எனவே கூடுதலாக 331 தூய்மைபணியாளர்கள் தேவைப்படுகிறது, மேலும் 100 தூய்மை பணியாளர்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் வீதம் 3 மேற்பார்வையாளர்கள், தேவைப்படுகிறது. 331 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 3 மேற்பார்வையாளர்கள் பணிநியமனம் செய்வதால் ஊதியம், போனஸ், ஈட்டிய விடுப்பு ஊதியம் போன்ற இதர சலுகை காரணங்களால் இந்நகராட்சிக்கு அதிக செலவுகள் மேற்கொள்ள வேண்டி இருக்கும் இதனால் வருவாய் இழப்பு ஏற்படும்.

மேற்காணும் நிலைமையை தவிர்க்கும் பொருட்டும், வரும் காலங்களில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை மேலும் செம்மையாக செயல்படுத்தவும் தனியர் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 331 தூய்மைபணியாளர்களும் மற்றும் 3 மேற்பார்வையாளர்கள் அமர்திக்கொள்ளவும், 2020-2021ம் ஆண்டிற்கான தோராய செலவினம் ரூ.784.30 லட்சத்தினை (ரூபாய் எழு கோடியே என்பத்தி நான்கு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் இச்செலவினத்தை 2020-2021ம் ஆண்டின் திருத்திய மற்றும் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யவும் அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அங்கீகரிக்கலாம்
ந.க.எண்.695/எச்1/2019
தீர்மான எண்.80:- அங்கீகரிக்கப்பட்டது.

ஓம்/-த.சௌந்தரராஜன்
தனி அலுவலர்
ஆம்பூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி

2020-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 26-ம் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற நகரமன்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகளின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.த.சௌந்தரராஜன்.பி.ஏ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

1. அரசாணை (நிலை) எண்.318 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நில முடிவு அலகு நிமு 1(2) பிரிவு நாள்.30.08.2019ல் வெளியிடப்பட்ட அரசாணையில் வருவாய் துறைக்கு சொந்தமான மேய்க்கால் புறம்போக்கு வகைப்பாட்டில் உள்ள நிலத்தில் வீடு கட்டியதின் மூலமாக ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஆக்கிரமனம் செய்துள்ள நபர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்ட வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும் ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாணங்குப்பம் பகுதியில் உள்ள வார்டு-F, பிளாக்-3,நகரளவு எண்.3/1 மொத்த பரப்பு 14.3366. ஹெக்டேர், மேய்க்கால் புறம்போக்கு வகைப்பாட்டில் உள்ள நிலத்தில் வீடு கட்டியதின் மூலமாக ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஆக்கிரமனம் செய்து வசித்து வரும் கீழ்கண்ட 9 நபர்களுக்கு வீட்டு மனைப்பட்ட வழங்க திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலுவலர், அவர்களின் ந.க.எண்.அ1/6291/2019, நாள்.23.08.2020ம் தேதிய கடிதத்தில் மேற்படி புலத்திற்கு நகர மன்ற தீர்மானம் அனுப்பிவைக்க கோரப்பட்டுள்ளது.

| வ.எண் | பயனாளிகளின் பெயர் | அனுபவவிஸ்தீரணம் |
|---|---|---|
| 1. | திருமதி.மாதவி க/பெ வெங்கடேசன் | 0.0037.3 |
| 2. | திருமதி.மனோன்மணி க/பெ சந்திரன் | 0.0028.5 |
| 3. | திருமதி.ஜெயலட்சுமி க/பெ விஸ்வநாதன் | 0.0058.8 |
| 4. | திருமதி.கலாவதி க/பெ ஹரிகுமார் | 0.0055.0 |
| 5. | திருமதி.தங்கமுத்து க/பெ கணேசன் | 0.0038.4 |
| 6. | திருமதி.சத்யா க/பெ விஸ்வநாதன் | 0.0034.5 |
| 7. | திருமதி.வசந்தா க/பெ முருகேசன் | 0.0032.2 |
| 8. | திருமதி.சுபலட்சுமி க/பெ முனிராஜ் | 0.0035.2 |
| 9. | திரு.தமிழ்செல்வன் த/பெ சேஷய்யன் | 0.0023.0 |
| | **மொத்தம்** | **0.0342.9** |

மேலும் வார்டு-F, பிளாக்-3,நகரளவு எண்.3/1 மொத்த பரப்பு 14.3366. ஹெக்டேர், மேய்க்கால் புறம்போக்கு வகைப்பாட்டில் உள்ள நிலத்தில் மேற்கண்ட 9 நபர்களுக்கு மொத்த அனுபவவிஸ்தீரணம் 0.0342.9 வீட்டு மனை பட்டா வழங்க ஆட்சேபணைகள் ஏதுமில்லை என சான்று வழங்க அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1130/எப்1/2020)

தீர்மான எண்.81:- அனுமதிக்கப்பட்டது.

2. அரசாணை (நிலை) எண்.318 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நில முடிவு அலகு நிமு 1(2) பிரிவு நாள்.30.08.2019ல் வெளியிடப்பட்ட அரசாணையில் வருவாய் துறைக்கு சொந்தமான மேய்க்கால் புறம்போக்கு வகைப்பாட்டில் உள்ள நிலத்தில் வீடு கட்டியதின் மூலமாக ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஆக்கிரமனம் செய்துள்ள நபர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்ட வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும் ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கம்பிக்கொல்லை பகுதியில் உள்ள வார்டு-B, பிளாக்-19, நகரளவு

எண்.5ல் உள்ள மேய்க்கால் புறம்போக்கு வகைப்பாட்டில் உள்ள இடத்தில் வீடு கட்டியதின் மூலமாக ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஆக்கிரமனம் செய்து வசித்து வரும் கீழ்கண்ட 2 நபர்களுக்கு வீட்டு மனைப்பட்ட வழங்க ஆம்பூர் வட்டாட்சியர், அவர்களின் ந.க.எண்.ஆ1/03/2020, நாள்.17.07.2020ம் தேதிய கடிதத்தில் மேற்படி புலத்திற்கு நகர மன்ற தீர்மானம் அனுப்பிவைக்க கோரப்பட்டுள்ளது.

| வ.எண் | பயனாளிகளின் பெயர் |
|---|---|
| 1. | திருமதி.கண்ணகி க/பெ காத்தவராயன் |
| 2. | திரு.தங்கதுரை (எ) துரைபாண்டி க/பெ சேட்டு |

மேலும் வார்டு-B, பிளாக்-19, நகரளவு எண்.5ல் உள்ள மேய்க்கால் புறம்போக்கு வகைப்பாட்டில் உள்ள இடத்தில் மேற்கண்ட 2 நபர்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்க எவ்வித ஆட்சேபணைகள் ஏதுமில்லை என சான்று வழங்க அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1078/எப்1/2020)

தீர்மான எண்.82:- அனுமதிக்கப்பட்டது.

**3.** இந்நகராட்சி குப்பை கிடங்கு மற்றும் அலுவலக வளாகத்தில் உள்ள பழைய பயன்படாத நிலையில் உள்ள குப்பை தொட்டிகள் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் இரும்பு பொருட்களை **06.08.2020–**ஆம் தேதி பொது ஏலம் விடப்பட்டதில் கோரப்பட்டுள்ள ஏல விபரம் பார்வைக்கும், முடிவிற்க்கும் வைக்கப்படுகின்றது,

| **வ.எண்** | **பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள்** | **ஏலத் தொகை ரூ** |
|---|---|---|
| **1** | ஜி. பிரபாகரன்,<br>அன்னை ராமாபாய் தெரு, ஆம்பூர் | **24,500/–** |
| **2.** | பி.கே. ராஜேந்திரன்,<br>ஆனந்தா நகர், பைபாஸ் ரோடு, ஆம்பூர் | **23,500/–** |
| **3.** | டி. விவேக்<br>சின்னதோட்டாளம், மாதனூர் போஸ்ட் | **24,200/–** |

**<u>அலுவலக குறிப்பு:–</u> <u>அ.</u>**மேற்கண்ட இனத்திற்க்கு உயர்ந்த பட்ச ஏலத் தொகை கோரியுள்ள திரு, ஜி. பிரபாகரன், ஆம்பூர் என்பவரது எலத் தொகையினை அங்கீகரிக்கலாம்.

ஆ.தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்படி ஏலப் பொருட்களை கொண்டு செல்ல பணி உத்திரவு வழங்கியமைக்கு அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 1049 /2020/இ2**

தீர்மான எண்.83:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஓம்/-த.சௌந்தரராஜன்
தனி அலுவலர்
ஆம்பூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி